தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு
குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹10,000 SPECIAL OFFER

ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சீஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004

# சக்கர வியூகம்

DAILY NEWS PAPER | SAKKRA VIYUGAM | புலனாய்வு நாளிதழ்

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 197 10.1.2026 SATURDAY MARGAZHI : 25 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 197 10.1.2026 சனிக்கிழமை மார்கழி : 25 விலை : ரூ.5/-

## இதுவரை

# “404 வாக்குறுதிகள் நிறைவேற்றம்”



■ தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் (09.01.2026) நடைபெற்ற “உங்க கனவ சொல்லுங்க” திட்டத்தின் அரசு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., கலந்து கொண்டு தன்னார்வலர்களிடம் உங்க கனவ சொல்லுங்க கைபேசி ஞிணீமீணீ சிணீகூஷீபீ வழங்கினார். உடன் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீகுமார் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.பழனிநாடார் (தென்காசி) மரு.தி.சதன்திருமலைக்குமார் (வாசுதேவநல்லூர்) தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர் ஆகியோர் உள்ளனர்.

## ‘உங்க கனவ சொல்லுங்க’ திட்ட தொடக்க விழாவில் ஸ்டாலின் தகவல்

திருவள்ளூர்: ஜன.10-

2021 சட்டப்பேரவை தேர்தலில் கொடுத்த 505 வாக்குறுதிகளில் 404 வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். இந்த சாதனையை செய்தது திராவிட மாடல் என்று ‘உங்க கனவ சொல்லுங்க..’ திட்டத்தை இன்று திருவள்ளூர் மாவட்டம் பாடியநல்லூரில் தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.



தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளில் அமல்படுத்தப்பட்ட பல்வேறு அரசு திட்டங்களில் பயனடைந்துள்ள பயனாளிகளின் தரவுகள் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தவும், அத்திட்டங்களின் தற்போதைய செயல்பாட்டு நிலை குறித்து பொதுமக்களின் கருத்தை அறியவும், மக்களின் எதிர்கால கனவுகள் மற்றும் தேவைகளைக் கண்டறியவும் அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று நேரடியாக அறிந்து கொள்ளும், ‘உங்க கனவ சொல்லுங்க’ என்ற புதிய திட்டம் தொடக்க விழா இன்று காலை திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றம் அருகே பாடியநல்லூரில் நடைபெற்றது.

இதில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட உள்ள, ’உங்க கனவ சொல்லுங்க..’ திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதனை தொடர்ந்து விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: தமிழக வரலாற்றில் இன்றைக்கு மிக மிக முக்கியமான நாள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசு, மக்களின் கனவுகளை கேட்டு, அதையெல்லாம் நிறைவேற்ற தொடங்கும் நாளாக இந்நாள் அமைந்திருக்கிறது.

2021 சட்டப்பேரவை தேர்தலுக்கு முன்பு, திருச்சியில் நடந்த திமுக மாநாட்டில், வளரும் வாய்ப்புகள் வளமான தமிழ்நாடு, மகசூல் பெருக்கம் மகிழும் விவசாயி, குடிமக்கள் அனைவருக்கும் குறையாத தண்ணீர், அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும் உயர்ந்த மருத்துவம், எழில்மிகு மாநகரங்களின் மாநிலம், உயர்தர ஊரகக் கட்டமைப்பு உயர்ந்த வாழ்க்கைத் தரம், அனைவருக்கும் அனைத்துமான தமிழ்நாடு என, 7 வாக்குறுதிகளை அளித்தேன்.

அதையெல்லாம், தற்போது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். சொன்னால், சொன்னதை செய்பவன்தான் இந்த ஸ்டாலின். பொருளாதாரத்தை உயர்த்துவோம் என்று சொன்னேன். இன்றைக்கு, தமிழகம் 11.19 விழுக்காடு வளர்ச்சியுடன் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக இருக்கிறது. அதேபோல், விவசாயம் லாபம் தரும் தொழிலாக மாறியிருக்கிறது.

இந்தியாவிலேயே கல்விக்காக தமிழகம் செய்யும் அளவுக்கு எந்த மாநிலமும் செலவு செய்வதில்லை என்று பெருமையுடன் சொல்லும் அளவுக்கு மாதிரி பள்ளிகள், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம் என்று பல திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். தமிழகம் இப்போது மருத்துவ சுற்றுலா மையமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் மட்டும்தான் தலைநகர், முதல் நிலை நகரங்கள் மட்டுமல்லாமல், 2ம் நிலை, 3ம் நிலை நகரங்களும் வளர்ந்திருக்கிறது; நகரங்கள் பேரூர்கள் மட்டுமல்லாமல், கிராமங்களும் வளர்ந்திருக்கின்றன. இது எல்லாவற்றுக்கும் மேல், சமூகநீதி அரசை திமுக நடத்திக் கொண்டிருக்கிறது.

பட்டியலின மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மையின மக்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர், விளிம்பு நிலை மக்கள் என, எல்லோருக்கும் பார்த்துப் பார்த்து திமுக அரசு செய்து கொண்டிருக்கிறது.

தமிழகத்துக்கும், தமிழர்களுக்கும் எதிராக மட்டுமே செயல்படும் பாஜக தொடர்ந்து மத்தியில் ஆட்சியில் இருந்து வருகிறது. தமிழகத்துக்கும், மத்திய அரசுக்கும் பாலமாக இருக்க வேண்டிய ஆளுநர், மக்களின் எண்ணங்களை பிரதிபலித்து, சட்டப்பேரவையில் நிறைவேற்றும் சட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதே தன் முதல் வேலையாக வைத்துள்ளார்.

இத்தனையையும் மீறி, மக்கள் எங்கள் கூடவே இருப்பதால்தான் 2021 சட்டப்பேரவை தேர்தலில் கொடுத்த 505 வாக்குறுதிகளில் 404 வாக்குறுதிகளை நிறைவேற்றி யிருக்கிறோம். இந்த சாதனையை செய்தது திராவிட மாடல்.

மக்கள் தேவைகளை உணர்ந்து, நல்ல பல திட்டங்களை செய்துகொண்டிருக்கும் திராவிட மாடல் அரசிடம் மக்கள் தங்களின் கனவுகளை சொல்ல வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான், ‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டம்.

இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்பங்களையும் அரசின் சார்பில் தன்னார்வலர்கள் சந்திப்பார்கள். அவர்களிடம் உங்களின் கனவுகளை சொல்லுங்கள். அதையெல்லாம் அவர்கள் டிஜிட்டல் முறையில் பதிவு செய்துகொள்வார்கள். அது எல்லாவற்றையும் ஆய்வு செய்து, தமிழ்நாட்டுக்கான ஒரு மாபெரும் கனவுத் திட்டத்தை அறிவிக்கப் போகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

## ‘ஜனநாயகன்’ படத்தை வைத்து திமுக, காங். கட்சிகள் அரசியல் செய்கின்றன

### பாஜக குற்றச்சாட்டு

சென்னை: ஜன.10-

தேர்தல் காலம் என்பதால், மக்களை திசை திருப்பும் நோக்கில் ‘ஜனநாயகன்’ படத்தை வைத்து திமுகவும், காங்கிரஸ் கட்சியும் அரசியல் செய்வதாக பாஜகவின் மாநில செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘பொதுவாக ஒரு திரைப்படத்தை குடும்பத்துடன் பார்ப்பதற்கு ஏற்ற வகையில் இருந்தால் மட்டுமே தணிக்கைத் துறையால் ‘யுஏ’ சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஒரு படத்துக்கு இந்தச் சான்றிதழை வழங்க வேண்டுமெனில், அதில் இடம்பெறும் காட்சிகள் மற்றும் வசனங்கள் குறித்த சில சட்ட விதிமுறைகள் உள்ளன. அந்த விதிகளுக்கு உட்பட்டு, திரைப்படத்தை ஆய்வு செய்த பின்னரே தணிக்கைத் துறை சான்றிதழ்களை வழங்கும்.

‘ஜனநாயகன்’ படத்துக்கு ‘யுஏ’ சான்றிதழ் வழங்குவதற்காக, சில குறிப்பிட்ட காட்சிகளை நீக்கும்படி படக்குழுவினருக்கு தணிக்கைத் துறை அறிவுறுத்தி உள்ளது. ஆனால், அந்த மாற்றங்களை செய்ய படக்குழுவினர் மறுத்து வருவதாகத் தெரிகிறது. இது முழுக்க முழுக்க தணிக்கைத் துறைக்கும் படக்குழுவுக்கும் இடையிலான நடைமுறைச் சிக்கலாகும்.

இந்த விவகாரத்துக்கும் மத்திய அரசுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. திரைப்படத் துறையில் அரசியல் செய்ய வேண்டிய அவசியம் பாஜகவுக்கு இல்லை. ஆனால், வரவிருக்கும் தேர்தலை மனதில் வைத்து, மக்களை திசை திருப்புவதற்காக திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட இண்டியா கூட்டணி கட்சிகள் திட்டமிட்டு மத்திய அரசுக்கு எதிராக அவதூறு பரப்பி வருகின்றன.

உண்மையை உணர்ந்து நடிகர் விஜய் தரப்பினர் இந்த விவகாரத்தில் அரசியல் செய்ய முயலக்கூடாது. ‘ஜனநாயகன்’ திரைப்படம் விரைவில் வெளியாகி வெற்றி பெற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்’’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மது விற்பனைக்கு கட்டுப்பாடு விதிக்கக்கோரிய மனு

### மதுவிலக்கு ஏடிஜிபி பரிசீலிக்க ஐகோர்ட் உத்தரவு

மதுரை: ஜன.10-

தமிழகத்தில் மது விற்பனைக்கு கட்டுப்பாடு விதிக்க கோரும் மனுவை மது விலக்கு ஏடிஜிபி பரிசீலிக்க உயர் நீதிமன்ற கிளை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக சீர்மரபினர் நலச்சங்கத்தின் சட்டப்பிரிவு தலைவர் கவுதம் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில்: “தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்டபோது தமிழகத்தில் மதுவிலக்கு சட்டம் செயல்பாட்டில் உள்ளது எனத் தெரிவிக்கப்பப்பட்டது. சட்டப்படி மருத்துவம், அறிவியல், தொழிற்சாலைகளுக்காக மட்டும் மதுவை உற்பத்தி செய்து விற்பனை செய்ய, குடிக்க வழங்க அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

2023ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற வழங்கிய தீர்ப்பிலும் உரிமம் இல்லாதவர்களுக்கு மதுவை குடிக்க விற்பனை செய்யக்கூடாது என உத்தரவு உள்ளது. மது வீட்டிற்கும், நாட்டிற்கும் கேடு என பாட்டிலில் அச்சிடப்பட்டிருந்தாலும், பலர் மதுவுக்கு அடிமையாக்கி வாழ்வை சீர்குலைத்து வருகின்றனர்.

மதுவால் தொழிலாளர்களின் வேலை செய்யும் திறன் குறைந்துவிட்டது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள், கொலை, கொள்ளை, விபத்து, தற்கொலை போன்ற பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. அனைத்து கட்சிகளும் படிப்படியாக மதுவை குறைத்து பூரண மது விலக்கை அமல்படுத்துவோம் என தேர்தல் வாக்குறுதியைக் கொடுத்துவிட்டு மக்களை ஏமாற்றி வருகின்றன. எனவே தமிழக டாஸ்மாக் நிறுவனம் மது குடிக்க உரிமை இல்லாதவர்களுக்கு மதுவை விற்பனை செய்யக்கூடாது என உத்தரவிட வேண்டும்’’ என்று மனுவில் கூறி யிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி, மதுவிலக்கு பிரிவின் கூடுதல் டிஜிபி மனுதாரரின் மனுவை பரிசீலித்து 6 வாரங்களில் உரிய முடிவெடுக்க உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

## சித்தரேவு பகுதி விவசாயிகளின் நலன் கருதி நீர் ஆதாரங்களுக்கு சிமெண்ட் வாய்க்கால் அமைக்கப்படும் : சித்தரேவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி, ஜன.10-

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி சித்தரேவு ஊராட்சியில் நடைபெற்றது. விழாவிற்கு கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் இராகவ்பாலாஜி தலைமை தாங்கினார். திமுக மாநில செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்; பாறைப்பட்டி ராமன், கூட்டுறவு துணைப் பதிவாளர் (பொது விநியோகத்திட்டம்) எஸ்.பி.கார்த்திகேயன், சரக துணைப் பதிவாளர் கார்த்திக் கௌதம், கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் செல்வகுமார், ஆகியோர் முன்னிலை வகி;த்தனர்.



பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கிவிட்டு பேசும்போது சித்தரேவு பகுதியில் உள்ள விவசாயிகள் மலையிலிருந்து வரும் நீர்வரத்து வாய்க்கல்களை தூர்வாரி கொடுக்க வேண்டும் என கோரிக்கை மனு கொடுத்தார்கள். நான் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் செய்ததுபோல் மலையிலிருந்து வரும் மழை நீர் அருகில் உள்ள 8 கண்மாய்களுக்கு செல்வதுபோல் இப்பகுதியில் உள்ள நீர் ஆதாரங்களுக்கு செல்வதுபோல் சிமெண்ட் வாய்க்கால் அமைத்துக் கொடுக்கப்படும் என்றார். இதன்மூலம் மழை நீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் நீர் ஆதாரத்திற்கு வரும்படி நடவடிக்கை எடுக்கப்படும். தமிழகத்தில் எந்தவொரு நலத்திட்டங்களாக இருந்தாலும் சரி எல்லோருக்கும் எல்;லாம் என்ற நிலைதான் உள்ளது.

நிகழ்ச்சியில் ஆத்தூர் வட்டாட்சியர் முத்துமுருகன், ஆத்தூர் வட்ட வழங்கல் அலுவலர் பிரவீணா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன், பத்மாவதி, சட்டமன்ற முகாம் மன்ற அலுவலர் வடிவேல் முருகன், ஒன்றிய பொறியாளர்கள் ராமநாதன், பாலசுப்பிரமணி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், ஒன்றிய திமுக அவைத்தலைவர் காணிக்கைசாமி, தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ் சிநாதன், கணேசன், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெல்லூர் மலைச்சாமி, சிறுபான்மையினர் ஒன்றிய அமைப்பாளர் பெரோஸ்கான், வார்டு செயலாளர்கள் இலியாஸ், ராஜாங்கம், சுதாகர், ஆரோக்கியசாமி, கணேசன், முன்னாள் வார்டு செயலாளர் மாடசாமி, ஊராட்சி செயலாளர் கண்ணன் உட்பட திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பால் கலந்துகொண்டனர். நிறைவாக ஆத்தூர் வட்டார பொது விினியோகத்திட்ட கூட்டுறவு சார்பதிவாளார் அறிவழகன் நன்றி கூறினார்.

## 'ஜனநாயகன்' படத்தை வைத்து திமுக, காங். கட்சிகள் அரசியல் செய்கின்றன: பாஜக குற்றச்சாட்டு

சென்னை ஜன.10-
தேர்தல் காலம் என்பதால், மக்களை திசை திருப்பும் நோக்கில் 'ஜனநாயகன்' படத்தை வைத்து திமுகவும், காங்கிரஸ் கட்சியும் அரசியல் செய்வதாக பாஜகவின் மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பொதுவாக ஒரு திரைப்படத்தை குடும்பத்துடன் பார்ப்பதற்கு ஏற்ற வகையில் இருந்தால் மட்டுமே தணிக்கைத் துறையால் 'யு' சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஒரு படத்துக்கு இந்தச் சான்றிதழை வழங்க வேண்டுமெனில், அதில் இடம்பெறும் காட்சிகள் மற்றும் வசனங்கள் குறித்த சில சட்ட விதிமுறைகள் உள்ளன. அந்த விதிகளுக்கு உட்பட்டு, திரைப்படத்தை ஆய்வு செய்த பின்னரே தணிக்கைத் துறை சான்றிதழ்களை வழங்கும்.



'ஜனநாயகன்' படத்துக்கு 'யுஏ' சான்றிதழ் வழங்குவதற்காக, சில குறிப்பிட்ட காட்சிகளை நீக்கும்படி படக்குழுவினருக்கு தணிக்கைத் துறை அறிவுறுத்தி உள்ளது. ஆனால், அந்த மாற்றங்களை செய்ய படக்குழுவினர் மறுத்து வருவதாகத் தெரிகிறது. இது முழுக்க முழுக்க தணிக்கைத் துறைக்கும் படக்குழுவுக்கும் இடையிலான நடைமுறைச் சிக்கலாகும்.

இந்த விவகாரத்துக்கும் மத்திய அரசுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. திரைப்படத் துறையில் அரசியல் செய்ய வேண்டிய அவசியம் பாஜகவுக்கு இல்லை. ஆனால், வரவிருக்கும் தேர்தலை மனதில் வைத்து, மக்களை திசை திருப்புவதற்காக திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட இண்டியா கூட்டணி கட்சிகள் திட்டமிட்டு மத்திய அரசுக்கு எதிராக அவதூறு பரப்பி வருகின்றன.

உண்மையை உணர்ந்து நடிகர் விஜய் தரப்பினர் இந்த விவகாரத்தில் அரசியல் செய்ய முயலக்கூடாது. 'ஜனநாயகன்' திரைப்படம் விரைவில் வெளியாகி வெற்றி பெற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கா, இஸ்ரேலின் பயங்கரவாத ஏஜெண்ட்களே போராட்டங்களை தூண்டிவிட்டனர்: ஈரான் குற்றச்சாட்டு

தெஹ்ரான், ஜன.10-
ஈரானில் நடந்துவரும் போராட்டங்கள் மற்றும் வன்முறையைத் தூண்டியதற்கு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் 'பயங்கரவாத ஏஜெண்டுகளே' காரணம் என்று ஈரான் அரசு ஊடகம் குற்றம் சாட்டியுள்ளது.

ஈரான் அரசு தொலைக்காட்சியில் இன்று காலை 8 மணி செய்தி ஒளிபரப்பில் வெளியான அறிக்கையில், 'நாட்டில் நடந்துவரும் போராட்டங்கள் மற்றும் வன்முறையை தூண்டியதற்கு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் 'பயங்கரவாத ஏஜெண்டுகளே' காரணம். இந்தப் போராட்டங்களில் வன்முறை வெடித்து உயிரிழப்புகள் ஏற்பட்டன. இந்தப் போராட்டங்களின்போது மக்களின் தனிப்பட்ட கார்கள், மோட்டார் சைக்கிள்கள், மெட்ரோ ரயில் சேவை



போன்ற பொது இடங்கள், தீயணைப்பு வாகனங்கள் மற்றும் பேருந்துகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன." என்று தெரிவிக்கப்பட்டது.

ஈரானில் பொருளாதார வீழ்ச்சி மற்றும் ஈரானிய ரியாலின் மதிப்பு சரிவுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்கள் கடந்த இரண்டு வாரங்களாகத் தொடர்கின்றன. இப்போராட்டம் நேற்று (வியாழக்கிழமை) மிகப்பெரிய அரசாங்க எதிர்ப்பு போராட்டமாக உருவெடுத்தது. நாட்டின் நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களில் இன்றும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக சந்தைகள் மற்றும் பஜார்கள் மூடப்பட்டிருக்கும் நிலையில், போராட்டங்களால் ஏற்பட்ட வன்முறை காரணமாக 45 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 2,260க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. டிசம்பர் 28 அன்று தெஹ்ரான் பஜாரில் கடையடைப்புடன் தொடங்கிய இந்தப் போராட்டங்கள், தற்போது ஈரானின் 31 மாகாணங்களுக்கும் பரவியுள்ளன.

போராட்டம் பரவுவதை தடுக்க ஈரான் அரசாங்கம் நாட்டில் இணைய சேவையை முடக்கியுடன், சர்வதேச தொலைபேசி அழைப்புகளையும் துண்டித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு மக்கள் தெருக்களில் இறங்க வேண்டும் என்று நாடு கடத்தப்பட்ட பட்டத்து இளவரசர் ரெசா பஹ்லவி விடுத்த அழைப்பைத் தொடர்ந்து, ஈரானில் போராட்டங்கள் வியாழக்கிழமை அன்று தீவிரமடைந்தன.

ட்ரம்ப் எச்சரிக்கை: ஈரானில் நடைபெற்று வரும் போராட்டங்களின் போது அப்பாவி மக்கள் கொல்லப்பட்டால் அமெரிக்கா தலையிடும் என்று ஈரான் அரசாங்கத்தை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் நேற்று (ஜனவரி 8) எச்சரித்தார். மேலும், "போராட்டக்காரர்கள் மீது ஈரான் அரசு ஏதேனும் தாக்குதல் நடத்தினால், நாங்கள் அவர்களை மிகவும் கடுமையாகத் தாக்குவோம்" என்றும் கூறினார்.

அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், "ஈரான் குடிமக்களுக்கு அமெரிக்கா துணை நிற்கும். அமைதியான போராட்டங்களில் ஈடுபடும் எவருக்கும் அமெரிக்கா துணை நிற்கும். வெளிப்படையாக, ஈரான் ஆட்சிக்கு பல பிரச்சினைகள் உள்ளன. ஈரான் தனது அணுசக்தித் திட்டம் குறித்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதே மிகவும் புத்திசாலித்தனமான விஷயம்." என்று கூறினார்.

## மது விற்பனைக்கு கட்டுப்பாடு விதிக்கக்கோரிய மனு: மதுவிலக்கு ஏடிஜிபி பரிசீலிக்க ஐகோர்ட் உத்தரவு

மதுரை, ஜன.10-
தமிழகத்தில் மது விற்பனைக்கு கட்டுப்பாடு விதிக்க கோரும் மனுவை மது விலக்கு ஏடிஜிபி பரிசீலிக்க உயர் நீதிமன்ற கிளை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பாக சீர்மரபினர் நலச்சங்கத்தின் சட்டப்பிரிவு தலைவர் கவுதம் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில்: "தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கேட்டபோது தமிழகத்தில் மதுவிலக்கு சட்டம் செயல்பாட்டில் உள்ளது என தெரிவிக்கப்பப்பட்டது. சட்டப்படி மருத்துவம், அறிவியல், தொழிற்சாலைகளுக்காக மட்டும் மதுவை உற்பத்தி செய்து விற்பனை செய்ய, குடிக்க வழங்க அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.



2023ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற வழங்கிய தீர்ப்பிலும் உரிமம் இல்லாதவர்களுக்கு மதுவை குடிக்க விற்பனை செய்யக்கூடாது என தீர்ப்பு உள்ளது. மது வீட்டிற்கும், நாட்டிற்கும் கேடு என பாட்டிலில் அச்சிடப்பட்டிருந்தாலும், பலர் மதுவுக்கு அடிமையாகி வாழ்வை சீர்குலைத்து வருகின்றனர்.

மதுவால் தொழிலாளர்களின் வேலை செய்யும் திறன் குறைந்துவிட்டது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள், கொலை, கொள்ளை, விபத்து, தற்கொலை போன்ற பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. அனைத்து கட்சிகளும் படிப்படியாக மதுவை குறைத்து பூரண மது விலக்கை அமல்படுத்துவோம் என தேர்தல் வாக்குறுதியைக் கொடுத்துவிட்டு மக்களை ஏமாற்றி வருகின்றன. எனவே தமிழக டாஸ்மாக் நிறுவனம் மது குடிக்க உரிமை இல்லாதவர்களுக்கு மதுவை விற்பனை செய்யக்கூடாது என உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி, மதுவிலக்கு பிரிவின் கூடுதல் டிஜிபி மனுதாரரின் மனுவை பரிசீலித்து 6 வாரங்களில் உரிய முடிவெடுக்க உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.



## இடைநிலை ஆசிரியர்கள் தொடர் போராட்டம்: சென்னையில் 2,500க்கும் மேற்பட்டோர் கைது

சென்னை, ஜன.10-
சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கையை முன்வைத்து, இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர் இயக்கம் சார்பில், கடந்த டிச. 26ம் தேதி முதல் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அரையாண்டு விடுமுறை முடிந்து கடந்த 5ம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ள நிலையிலும், ஆசிரியர்கள் தங்கள் போராட்டத்தை தொடர்வதால் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படாது என்று தொடக்கக் கல்வித் துறை அறிவித்தது.

இதையடுத்து, இடைநிலை ஆசிரியர்கள் தங்கள் போராட்டங்களை தீவிரப்படுத்தியுள்ளனர். 14 வது நாளாக சென்னை எழும்பூர் காந்தி இர்வின் பாலத்தில் நேற்று காலை சுமார் 500 ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர், மதியம் 12 மணியளவில், எழும்பூர் ரயில் நிலையத்தில் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பேரணியாக வந்து சேர்ந்தனர். தொடர்ந்து திடீரென மேம்பாலத்தில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் போக்குவரத்து முழுவதும் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து அவர்களை போலீஸார் கைது செய்தனர். ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால் கைது நடவடிக்கைகள் மட்டும் 3 மணி நேரத்துக்கு மேலாக நீடித்தது.

மேலும், அப்போது ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் சில ஆசிரியர்கள் மயக்கமடைந்தனர். சிலருக்கு காயங்கள் ஏற்பட்டன. கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் மண்டபங்களில் அடைக்கப்பட்டு, இரவில் விடுவிக்கப்பட்டனர்.

ஆசிரியர்களின் போராட்டத்தால் பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் பணிகளும் பாதிக்கப்பட்டு வருவதால், தமிழக அரசு இந்த விவகாரத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கைகள் எழுந்துள்ளன.

இதேபோல், பணி நிரந்தம் செய்யக் கோரி பகுதிநேர ஆசிரியர்கள் சென்னை டிபிஐ வளாகம் முன்பு போராட்டம் நடத்தினர். அவர்களையும் போலீஸார் கைது செய்தனர். ஆசிரியர்களின் கைது செய்யப்பட்ட வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின. இதற்கு பாமக தலைவர் அன்புமணி கண்டனம் தெரிவித்துள்ளார்.



## வெனிசுலா கச்சா எண்ணெய் ஏற்றுமதியை கட்டுப்பாட்டில் வைத்திருக்க அமெரிக்கா திட்டம்

வாஷிங்டன், ஜன.10-
வெனிசுலாவில் கச்சா எண்ணெய் கட்டமைப்பை நவீனமாக்க அமெரிக்க எண்ணெய் நிறுவனங்களை அதிபர் ட்ரம்ப் நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. இந் நிலையில் வெனிசுலாவின் கச்சா எண்ணெய் ஏற்றுமதியை கட்டுப்பாட்டில் வைத்திருப்போம் என அமெரிக்கா கூறியுள்ளது.

இதுகுறித்து கருத்தரங்கு ஒன்றில் பேசிய அமெரிக்க எரிசக்தி துறை அமைச்சர் கிரிஸ் ரைட் கூறும்போது, ``வெனிசுலாவில் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கான தடை படிப்படியாக நீக்கப்படும். வெனிசுலா கச்சா எண்ணெயை மீண்டும் விற்கப் போகிறோம். இந்த வருமானத்தை வெனிசுலா கணக்கில் வரவு வைக்கப்படும்.

இந்தப் பணம் வெனிசுலா மக்களுக்காக பயன்படுத்தப்படும். 2000ம் ஆண்டுகளில் அமெரிக்காவின் எக்ஸான் மொபில் கார்ப்ரேஷன், கோனோகோபிலிப்ஸ் மற்றும் கம்பெனிகளை வெனிசுலாவின் முன்னாள் அதிபர் ஹுகோ சாவேஸ் அரசுடைமையாக்கினார்.

அந்த நிறுவனங்களுக்கு எல்லாம் இழப்பீடு அளிக்க வேண்டியுள்ளது. வெனிசுலா எண்ணெய் விற்பனை மூலம் முதலில் கிடைக்கும் பணம், அமெரிக்க நிறுவனங்களுக்கு திருப்பி கொடுக்க பயன்படுத்தப்படாது. அது நீண்ட கால பிரச்சினை" என்றார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கடந்த செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டியில், "அமெரிக்கா விற்பனை செய்ய 5 கோடி பேரல் கச்சா எண்ணெயை வெனிசுலா விடுவிக்கும். இவற்றின் தற்போதைய சந்தை மதிப்பு 2.8 பில்லியன் டாலர்'' என்றார்.



## புதுச்சேரி அரசு மின்சாரப் பேருந்து ஓட்டுநர்கள் திடீர் வேலை நிறுத்தம் மக்கள் அவதி

புதுச்சேரி, ஜன.10-
பி.எப், இ.எஸ்.ஐ. பணம் பிடித்தம் செய்யாத நிர்வாகத்தை கண்டித்தும், பணி பாதுகாப்பு வழங்க கோரியும் புதுச்சேரி அரசு மின்சாரப் பேருந்து ஓட்டுநர்கள் பேருந்துகளை இயக்காமல் திடீரென வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் அவதி அடைந்தனர்.

புதுச்சேரி அரசின் போக்குவரத்து கழகம் சார்பில் தனியார் பங்களிப்புடன் ரூ.23 கோடியில் 25 மின்சார பேருந்துகள் நவம்பர் மாதம் முதல் இயக்கப்படுகின்றன.

இந்த மின்சார பேருந்துகளுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த நிலையில் ஊதிய பிரச்சினை, பி.எப் பிடிக்காத நிர்வாகத்தை கண்டித்து ஏற்கனவே ஊழியர்கள் போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில் இன்று மீண்டும் அரசு மின்சார பேருந்து ஊழியர்கள் தங்களுக்கு பி.எப், இ.எஸ்.ஐ பணம் பிடித்தம் செய்யாத நிர்வாகத்தை கண்டித்தும், பணி பாதுகாப்பு வழங்க வேண்டும் எனக் கோரியும், 6 மாதத்திற்கு பிறகு தான் பிடித்தம் செய்யப்படும் என நிர்வாகம் கூறியதால் நிர்வாகத்தை கண்டித்து ஊழியர்கள் இன்று காலை முதல் பேருந்துகளை இயக்காமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## 'ஜனநாயகன்' படத்துக்கு உடனடியாக U/A சான்று வழங்க தணிக்கை வாரியத்துக்கு ஐகோர்ட் உத்தரவு

'சென்னை, ஜன.10-
விஜயின் 'ஜனநாயகன்' திரைப்படத்துக்கு உடனடியாக யு/ஏ சான்று வழங்க தணிக்கை வாரியத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பிய தணிக்கை வாரிய உத்தரவையும் ரத்து செய்யவதாக தெரிவித்துள்ளது.

நடிகர் விஜய்யின் 'ஜனநாயகன்' திரைப்படம் இன்று (ஜனவரி 9) வெளியாகும் என அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், அப்படத்துக்கு தணிக்கைச் சான்றிதழை வழங்க மத்திய தணிக்கை வாரியம் தாமதித்ததால், தயாரிப்பு நிறுவனமான கே.வி.என் புரொடக்ஷன்ஸ், சென்னை உயர் நீதிமன்றத்தில் அவசர மனு தாக்கல் செய்தது. இந்த வழக்கை



நீதிபதி பி.டி.ஆஷா விசாரித்தார்.

தணிக்கை குழு சார்பில் வைக்கப்பட்ட வாதத்தில், "பதில் மனு தாக்கல் செய்ய அனுமதித்தால் நீதிமன்றம் கேட்கும் அனைத்து கேள்விகளுக்கும் முழுமையான பதில் அளிக்கப்படும். இப்படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பியது மத்திய அரசின் முடிவல்ல. படத்தை மறு ஆய்வுக்கு அனுப்ப சென்சார் போர்டு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

திரைப்படத்தில் பாதுகாப்புப் படைகளின் சில சின்னங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த நிபுணர்களிடம் ஆலோசனை பெற்றிருக்க வேண்டும். ஜனநாயகன் படத்துக்கு எதிராக புகாரளித்தவர் தணிக்கைக் குழு உறுப்பினர்.

சில காட்சிகளை நீக்கினால் சான்றிதழ் வழங்கப்படும் என தெரிவித்த பின்னரும் கூட படத்தை மறு ஆய்வுக்கு அனுப்ப அதிகாரம் உள்ளது. இப்படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்குவதில் எந்த உள்நோக்கமும் இல்லை" என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயகன் படக்குழு தரப்பில் வைக்கப்பட்ட வாதத்தில், "பெரும்பான்மை உறுப்பினர் படத்துக்கு சான்று வழங்க பரிந்துரை செய்துள்ளனர். பெரும்பான்மை ஆதரவு இல்லாவிட்டால் மட்டுமே மறு ஆய்வுக்கு அனுப்ப முடியும். ஆனால், ஜனநாயகன் படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்காமல் இழுத்தடிக்கின்றனர்" என படக்குழு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து நீதிபதி பி.டி.ஆஷா, "ஆட்சேபங்கள் பரிசீலிக்கப்படவில்லை என்று மட்டுமே புகாரில் கூறப்பட்டுள்ளது, அந்த புகார் நிலைக்கத்தக்கதல்ல. படத்துக்கு யு/ஏ சான்று வழங்க முடிவு செய்த பின் மறு ஆய்வுக்கு அனுப்பியது ஏன்? யு/ஏ சான்றிதழ் ஒப்புதல் அளித்த குழுவில் இருந்த நபரே எப்படி தனி புகார் அளிக்க முடியும்?" என்று கேள்வி எழுப்பினார்.

இதனை தொடர்ந்து, ஜனநாயகன் படத்தின் தணிக்கை சான்றிதழ் தொடர்பான வழக்கில் இன்றைக்கு (ஜன.9) தீர்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

அதன்படி, நீதிபதி ஆஷா இன்று தீர்ப்பு வழங்கினார். அதில், ஜனநாயகன் படத்தை வெளியிடும் வகையில் படத்துக்கு உடனடியாக யு/ஏ சான்று வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டதோடு மறு ஆய்வுக்கு அனுப்பிய தணிக்கை வாரிய உத்தரவையும் ரத்து செய்தார்.

மேல்முறையீடு செய்ய கோரிக்கை: இதற்கிடையில், 'ஜனநாயகன்' வழக்கில் தீர்ப்பை எதிர்த்து தணிக்கை வாரியம் தரப்பில் மேல்முறையீடு செய்ய தலைமை நீதிபதி முன்பாக முறையீடு செய்யப்பட்டது. அதற்கு, மனுவாக தாக்கல் செய்யுங்கள், பிற்பகலில் விசாரிக்கிறேன் என தலைமை நீதிபதி தெரிவித்திருக்கிறார்.

# திராவிட இயக்கத்தின் விதை நாடக மேடைகளில்தான் விதைக்கப்பட்டது: ப.சிதம்பரம் தகவல்



சென்னை, ஜன.10-

'திராவிட இயக்கத்தின் விதை நாடக மேடைகளில் தான் விதைக்கப்பட்டது' என்று முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார். தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் 'நாடகவியல் களஞ்சியம்' நூல் வெளியீட்டு விழா சென்னை பல்கலைக் கழக வளாகத்தில் நேற்று நடைபெற்றது.இதில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி, சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று நூலை வெளியிட, திரைப்பட இயக்குநர் சுரேஷ் ராஜகுமாரி முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

இந்த விழாவில், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் ம.ராசேந்திரன், சென்னை பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) ரீட்டா ஜான், துணைவேந்தர் பொறுப்புக் குழு உறுப்பினர் எஸ்.ஆம்ஸ்ட்ராங், நூலாசிரியர் மு.ராமசுவாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில், ப.சிதம்பரம் பேசியதாவது: கடந்த 2008ம் ஆண்டு தொடங்கப்பட்டு, 2011ல் வரைவு நூல் வந்து, பல்வேறு திருத்தங்களுக்குப் பிறகு இன்றைக்கு ஒரு முழுமையான நூலாக 'நாடகவியல் களஞ்சியம்' வெளிவந்துள்ளது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் நிதிச் சுமையை அரசின் ஒத்துழைப்போடு குறைத்துள்ளோம்.இதற்காக ரூ.2.15 கோடி நிதியை தமிழக அரசு வழங்கியுள்ளது. மேலும், ரூ.1 கோடியை நன்கொடையாக திரட்டி, நூறு ஆண்டுகள் நிதிச்சுமையின்றி கழகம் செயல்படுவதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.அதேபோல், அறிஞர்கள் சந்தித்து விவாதிப்பதற்கான ஒரு தளத்தையும் நாம் உருவாக்க வேண்டும். எல்லோரும் அவ்வப்போது சந்தித்து கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் புதிய சிந்தனைகள் பிறக்கும். எனக்கு நாடகங்கள் மிகவும் பிடிக்கும். பல சிறந்த நடிகர்களை உருவாக்கியது நாடகம்தான்.

அது மட்டுமின்றி, தமிழகத்தின் அரசியலில் நாடகத் துறையின் பங்கு மிகவும் முக்கியமானது. திராவிட இயக்கத்தின் விதையே நாடக மேடைகளில்தான் விதைக்கப்பட்டது. அண்ணா, கருணாநிதி ஆகியோர் நாடகங்களை அரசியல் மாற்றங்களுக்கு திறம்படப் பயன்படுத்தினர்.இனி 3 மாதங்களுக்கு ஒரு நூல் என பல்வேறு நூல்களை வெளியிட தமிழ் வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது. எனவே இன்னும் பல பேர் எழுதுவதற்கு ஆர்வத்துடன் முன்வர வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# அதிமுக கோட்டையை இடிக்க சம்மட்டியோடு காத்திருக்கிறார்" கட்சியினரை எச்சரித்த வேலுமணி



கோவை, ஜன.10-

கோவையை உள்ளடக்கிய மேற்கு மண்டலம் தொடர்ச்சியாக அதிமுக கோட்டையாகவே இருந்து வருகிறது. இந்த முறை அதைத் தகர்த்து மேற்கு மண்டலத்தில் வெற்றிகொடி நாட்டுவதற்காக செந்தில்பாலாஜியை மண்டலப் பொறுப்பாளராக கோவைக்கு அனுப்பி இருக்கிறது திமுக. இதனால், இம்முறை கோவையில் கொடிநாட்டப் போவது செந்தில்பாலாஜியா அல்லது பழையபடி எஸ்.பி.வேலுமணியே தானா என்கிற எதிர்பார்ப்பு இரண்டு கட்சிக்குள்ளும் இருக்கிறது.

இந்நிலையில், அண்மையில் நடந்த அதிமுக பொதுக்குழுக் கூட்டத்தில், ''திமுககாரன் கடைசி வரை பூத்தில் பணியில் இருப்பான்'' என வேலுமணி பேசிய வீடியோ கிளிப்பிங் சமூகவலைதளங்களில் வைரலாக ஓடி சமீபத்தில் தான் ஓய்ந்தது. இந்நிலையில், அடுத்த வைரலுக்கு கன்டென்ட் கொடுத்திருக்கிறார் வேலுமணி. ஒருங்கிணைந்த கோவை மாவட்ட அதிமுக செயற்குழுக் கூட்டம், கோவையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், பேசிய அதிமுக எம்எல்ஏக்கள் பலரும் "கோவை அதிமுகவின் கோட்டை, பழனிசாமியின் கோட்டை, எஸ்பிவியின் கோட்டை. இதை யாரும் ஒன்றும் செய்ய முடியாது" என வீரவசனம் பேசினர்.

அதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு பேச வந்த எஸ்.பி.வேலுமணி, ''கோவை பழனிசாமியின் கோட்டை, எஸ்பிவியின் கோட்டை. யாரும் ஓட்டை போட முடியாது என்கிறீர்கள். ஆனால், ஓட்டை போட வேண்டுமென கையில் சம்மட்டியை வைத்துக் கொண்டு ஒரு ஆள் (செந்தில்பாலாஜி) தயாராக உள்ளார். அதை எடுத்து வீசிவிட்டு, ஓட்டையே போடாமல் பாதுகாக்க வேண்டியது நமது கடமை. அவர்கள் (திமுகவினர்) கொலுசு கொடுப்பார்கள், பணம் கொடுப்பார்கள். தேர்தல் நேரத்தில் என்ன வேண்டுமானாலும் சொல்லி மக்களை ஏமாற்றுவார்கள். திமுகவினர், பார்த்தால் எந்த வேலையும் செய்யாதது போல் இருப்பார்கள்.

ஆனால், எல்லா வேலையும் செய்து கொண்டிருப் பார்கள். இன்றைய சூழலில் திமுகவை குறைத்து மதிப்பிடக்கூடாது. இந்த நேரம், இந்தக் காலம் மிக முக்கியமானது. எதிரியை எந்தக் காலத்தில் நாம் முந்தவிட்டுவிடக் கூடாது'' என்றார். வேலுமணியின் பேச்சைக் கேட்ட பெரும்பாலான நிர்வாகிகள், ''அண்ணன் நம்மை எச்சரிக்கிறாரா அல்லது திமுகவினரை புகழ்கிறாரா?'' என கமென்ட் அடித்தபடியே கலைந்து சென்றனர். வேலுமணிக்கு நெருக்கமானவர்களோ, "இப்படியெல்லாம் தட்டிவிட்டால் தான் கட்சிக்காரங்க சுறுசுறுப்பாகி ஆளும் கட்சிக்கு இணையா சுணக்கமில்லாம வேலை செய்வாங்கன்னு அண்ணன் அப்படிப் பேசிருக்காரு. மத்தபடி, எத்தனை பாலாஜிகள் வந்தாலும் அவருக்கிட்ட நிக்க முடியாது" என்கிறார்கள்.



# யார் முதல்வராக வரக்கூடாது என்பதுதான் எங்களுக்கு முக்கியம்: நயினார் நாகேந்திரன் கருத்து

புதுக்கோட்டை, ஜன.10-

கூட்டணியில் எங்களுக்கு தொகுதி எண்ணிக்கை முக்கியம் அல்ல. யார் முதல்வராக வரக் கூடாது என்பதுதான் முக்கியம் என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே பாஜகவின் தன்னார்வ தொண்டு நிறுவன பிரிவு (என்ஜிஓ) சார்பில் சுதேசி, சுயசார்பு மற்றும் சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் 'வாழ்வாதார அடைக்காப்பகம்' திட்டத் தொடக்க விழா நேற்று நடைபெற்றது.

என்ஜிஓ பிரிவின் மாநில அமைப்பாளர் இரா.அர்ஜுனமூர்த்தி தலைமை வகித்தார். மாநிலச் செயலாளர் எல்.முரளிதரன் வரவேற்றார். பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் சிறப்புரை ஆற்றினார்.

அமைப்பு பொதுச் செயலாளர் கேசவவிநாயகம், பாஜக மாநிலச் செயலாளர் கருப்பு முருகானந்தம், துணைத் தலைவர் குஷ்பு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பின்னர், நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தேர்தல் கூட்டணி தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி சந்தித்து உள்ளார். நானும் பழனிசாமியை சந்தித்துப் பேச உள்ளேன். கூடுதல் இடங்களைக் கேட்டு பாஜக நெருக்கடி கொடுக்கவில்லை.

எங்களுக்கு தொகுதி எண்ணிக்கை முக்கியம் அல்ல. யார் முதல்வராக வரக் கூடாது என்பதுதான் முக்கியம். அதிமுக பொதுச் செயலாளரை சந்தித்து அன்புமணி பேசியது சட்டவிரோதமானது என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியது தொடர்பாக நான் கருத்து கூற முடியாது.

நடிகர் விஜய்யின் ஜனநாயகன் படத்துக்கு தணிக்கைச்சான்று வழங்காததற்கு பிரதமரை குறை கூற முடியாது. அதை திரைப்பட தணிக்கை வாரியம் பார்த்துக் கொள்ளும்.

நடிகர் விஜய்க்கு காங்கிரஸ் கட்சி ஆதரவாக இருப்பதாக தெரிவதைப் பார்த்தால், காங்கிரஸ் கட்சியினர் நடிகர் விஜய்யுடன் பேசி இருக்கலாம் என்று கருதுகிறேன். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறினார்.




# புதிய ஓய்வூதியத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பதா? தலைமைச் செயலக சங்கத்தை எதிர்த்து 200 ஊழியர்கள் முற்றுகை

சென்னை, ஜன.10-

அரசு ஊழியர்களுக்கு மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று ஜாக்டோஜியோ கூட்டமைப்பு கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக போராடி வந்தது.

இந்த கூட்டமைப்பில் தலைமைச் செயலக சங்கமும் உள்ளது. இந்த நிலையில், தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் என்ற திட்டத்தை அரசு கடந்த 3ம் தேதி அறிவித்தது.

பழைய ஓய்வூதியத் திட்டம்போல, உறுதியான ஓய்வூதியம், பணிக்கொடை இருப்பதால் இத்திட்டத்தை ஜாக்டோஜியோ கூட்டமைப்பின் நிர்வாகிகள் வரவேற்றனர். இதற்கிடையே, அரசு ஊழியர்களிடம் மாதம்தோறும் பிடித்தம் செய்யப்படும் 10 சதவீத தொகை திருப்பித் தரப்படுமா, தரப்படாதா என்று தெளிவாக கூறப்படாததால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களிடம் இத்திட்டத்துக்கு சற்று அதிருப்தியும் உள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்தின் கூட்டம் அதன் தலைவர் கு.வெங்கடேசன் தலைமையில் நேற்று மதிய உணவு இடைவேளையின்போது நடந்தது. அப்போது, தலைமைச் செயலக ஊழியர்கள் 200க்கும் மேற்பட்டோர் சங்க அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

புதிய ஓய்வூதியத் திட்டத்துக்கு ஏன் ஆதரவு அளிக்கிறீர்கள் என்று கேட்டு, சங்க நிர்வாகிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். 'ஊழியர்களிடம் பிடித்தம் செய்யப்படும் பங்களிப்புத் தொகையை ஓய்வுபெறும்போது திருப்பித் தரவேண்டும்.

புதிய ஓய்வூதியத் திட்டத்தை ஏற்கக் கூடாது. மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தையே அமல்படுத்த வலியுறுத்தி போராட்டம் நடத்த வேண்டும்' என்று சங்க நிர்வாகிகளிடம் வலியுறுத்தினர். ஊழியர்களின் திடீர் முற்றுகைப் போராட்டத்தால் தலைமைச் செயலகத்தில் பரபரப்பான சூழல் காணப்பட்டது.

# வளர்ந்த இந்தியா' என்ற இலக்கை அடைவதற்கு மாணவர்கள் அர்ப்பணிப்புடன் பங்களிக்க வேண்டும் ஆளுநர் வேண்டுகோள்

காட்டங்கொளத்தூர், ஜன.10-

பெரிய அளவில் கனவு கண்டு, விடாமுயற்சியுடன் செயல்பட்டு, 'வளர்ந்த இந்தியா' என்ற இலக்கை அடைவதற்கு, மாணவர்கள் அர்ப்பணிப்புடன் பங்களிக்க வேண்டும் என்று எஸ்.ஆர்.எம். பல்கலை. விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் இந்தியக் குடியரசின் 75 ஆண்டுகள் வரலாற்றைப் போற்றும் வகையில், 'இந்திய குடியரசு 75 ஆண்டுகள்' என்ற கருத்தரங்கு, வேந்தர் அருங்காட்சியகம் தொடக்க விழா நேற்று நடைபெற்றது.



இந்நிகழ்ச்சிக்கு எஸ்ஆர்எம் பல்கலை. நிறுவனர் மற்றும் வேந்தர் டி. ஆர். பாரிவேந்தர் தலைமை தாங்கினார். ஆளுநர் ஆர்.என்.ரவி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று 'வேந்தர் அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார்.

இதில் இந்திய அரசிய லமைப்பின் பரிணாமம், கோட்பாடுகள் மற்றும் ஜனநாயக அமைப்புகள் குறித்த அரிய காட்சிப்பொருட்களும், ஆவணங்களும் இடம்பெற்றுள்ளன. பின்னர் கருத்தரங்கில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியது: இளைஞர்கள் ஒவ்வொருவரும் நாட்டின் விலைமதிப்பில்லா சொத்து.


லட்சியத்துடன் ஒழுக்கத்தையும் இணைத்து, பெரிய அளவில் கனவு கண்டு, விடாமுயற்சியுடன் செயல்பட்டு 'விக்சித் பாரத்' (வளர்ந்த இந்தியா) என்ற இலக்கை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பங்களிக்க வேண்டும் என்றார்.

வேந்தர் டி. ஆர். பாரிவேந்தர் பேசும்போது, "ஜனநாயகத்தையும் தேசிய முன்னேற்றத்தையும் நிலைநிறுத்துவதில் வலுவான கல்வி நிறுவனங்களின் முக்கியப் பங்கு உள்ளது. கல்வி என்பது, ஒற்றுமை, தேசிய உணர்வு, பொறுப்புணர்வை வலுப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்பதே எமது குறிக்கோள். உயர்கல்வி நிறுவனங்கள், தேசத்தின் மீது அர்ப்பணிப்புள்ள குடிமக்களை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன'' என்றார்.

# அமெரிக்க இந்திய வர்த்தக ஒப்பந்தம் நிறைவேறாதது ஏன்? ஹோவார்டு லூட்னிக் விளக்கம்

நியூயார்க், ஜன.10-

அமெரிக்க இந்திய வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்காக அதிபர் ட்ரம்ப்புடன், பிரதமர் மோடி தொலைபேசியில் பேசாததே ஒப்பந்தம் நிறைவேறாததற்குக் காரணம் என்று அமெரிக்க வர்த்த அமைச்சர் ஹோவார்டு லூட்னிக் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாகப் பேசிய ஹோவார்டு லூட்னிக், ''இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் ஆகிய நாடுகளுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தி, பின்னர் அந்த நாடுகளுடன் பல ஒப்பந்தங்களை நிறைவேற்றினோம். இந்த ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படுவதற்கு முன்பாகவே, அமெரிக்க இந்திய ஒப்பந்தம் கையெழுத்தாகும் என நாங்கள் கருதினோம். அதற்காக நான் அதிக முக்கியத்துவம் கொடுத்து பேச்சுவார்த்தை நடத்தினேன்.


இப்போது பிரச்சினை என்னவென்றால், அந்த ஒப்பந்தம் அதிக வரி விதிப்புகளைக் கொண்டதாக இருந்தது. அதனால், அதை ஒப்புக்கொள்ள இந்தியா தயங்கியது. இது தொடர்பாக இந்தியப் பிரதமர் மோடியுடன் நான் பேசினேன். ஒப்பந்தத்தை இறுதி செய்ய அதிபர் டொனால்டு ட்ரம்ப்புடன் பேசுமாறு கோரினேன்.

அதற்கு அவர், ஒப்பந்தத்தை ஏற்பதை இந்தியாவுக்கு உகந்ததாக உணரவில்லை என கூறினார். இதனால், அவர் ட்ரம்ப்புடனான தொலைபேசி அழைப்பை தவிர்த்தார்.

ஆனால், நாங்கள் ஒப்பந்தத்தை ஏற்க தயாராக இருக்கிறோம் என்று இந்தியா பின்னர் கூறியது. எதற்கு தயாராக இருக்கிறீர்கள் என்று நான் அவர்களிடம் கேட்டேன்'' என தெரிவித்துள்ளார்.

# பொங்கலுக்குள் கூட்டணியை அறிவிப்போம்" ராமதாஸ் தகவல்

"திண்டிவனம், ஜன.10-



அன்புமணி ஒரு மோசடிப் பேர்வழி என்பதால், அவருடன் கூட்டணி அமைப்பார்களா என்பது சந்தேகம். மூத்த நிர்வாகிகளுடன் ஆலோசித்து, பொங்கலுக்குள் எங்கள் கூட்டணியை அறிவிப்போம்" என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக, திண்டிவனத்தை அடுத்த தைலாபுரத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது: ராமதாஸால் தொடங்கப்பட்ட பாமகவை உரிமை கொண்டாட அன்புமணிக்கு தகுதி இல்லை. வியர்வை, ரத்தம் சிந்தி 96 ஆயிரம் கிராமங்களுக்கு ஓடியோடி உழைத்து கட்சியை வளர்த்துள்ளேன். நான் செய்த சத்தியத்தையும் மீறி, அன்புமணியை கட்சியில் சேர்த்து மத்திய அமைச்சராக்கினேன். 'எனக்கே வேட்டு வைப்பார்' என்று அப்போது தெரியாது.

அன்புமணி செய்த தில்லுமுல்லு தெரியவந்ததும், பாமகவின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கிவிட்டேன். கட்சித் தலைமை பதவியை கொடுத்த என்னிடம் இருந்து கட்சியை பறிக்க சதித்திட்டம் தீட்டி, சூழ்ச்சியுடன் செயல்படுவதை மக்கள் அறிவார்கள். டெல்லி உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி, பாமகவில் அன்புமணி இல்லை. அவரிடம் தலைமைப் பண்பு இல்லாததால், தலைவர் பதவியை நானே எடுத்துக்கொண்டேன். பாமக என்னிடம்தான் உள்ளது. தொண்டர்கள் என்னிடம் உள்ளனர்.

பணம் மற்றும் காருக்கு ஆசைப்பட்டு அவருடன் சிலர் சென்றுவிட்டனர். அன்புமணியின் துரோகத்தை தொண்டர்களும், மக்களும் புரிந்து கொண்டுள்ளனர். தந்தைக்கு துரோகம் செய்த அன்புமணியால் தேர்தலில் யார் நிறுத்தப்பட்டாலும் பாமகவினரும், மக்களும் வாக்களிக்கமாட்டார்கள். பாமக தொடர்பாக நாங்கள் தொடர்ந்த வழக்கில், உரிமையியல் நீதிமன்றத்தை நாடலாம் என டெல்லி உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பாமக சார்பில் அன்புமணி கூட்டணி பேசுவது என்பது நீதிமன்ற அவமதிப்பாகும். என் தலைமையில்தான் கூட்டணிபேச முடியும். நான் இருக்கும் கூட்டணிதான் ஆட்சி அமைக்கும். அதிமுகவுடன் பாமக கூட்டணி என ஒரு நாடகம் நடத்தப்பட்டுள்ளது. என் தலைமையில் கூட்டணி அமையும் என்று நான் சொல்ல முடியாது; சொல்லக்கூடாது. என் கட்சியைவிட வலுவான கட்சிகள் தமிழகத்தில் உள்ளன. அதனால், இந்த வேலையை நான் செய்ய முடியாது. இதனால் என்னிடம் வலு இல்லை எனச் சொல்ல முடியாது. வலுவுடனும் பலமாகவும் இருக்கிறேன். நல்ல கட்சிகளுடன் சேர்ந்து அமைப்பதுதான் கூட்டணி.

யாருடன் அன்புமணி கூட்டணி பேசினாலும், அது செல்லாது. அன்புமணி ஒரு மோசடிப் பேர்வழி என்பதால், அவருடன் கூட்டணி அமைப்பார்களா என்பது சந்தேகம். மூத்த நிர்வாகிகளுடன் ஆலோசித்து, பொங்கலுக்குள் கூட்டணியை அறிவிப்போம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அன்புமணி இடம் பெற்றுள்ளதால் அதிமுகவை புறக்கணிப்பீர்களா என்று கேட்டதற்கு, "இதற்கு இன்னும் 2 நாட்களில் பதில் கிடைக்கும்.

திமுகவுடன் கூட்டணி அமைக்கப்படுமா அல்லது தவெக மாற்று வாய்ப்பாக இருக்கக்கூடுமா எனக் கேட்கிறீர்கள். அரசியலில் எது வேண்டுமானாலும் நடக்கும். எந்த மாற்றம் வேண்டுமானாலும் வரும். கூட்டணி குறித்து அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பேச்சுவார்த்தை நடத்தவில்லை.

பழனிசாமியிடமும் அன்புமணி பொய் சொல்லியிருக்கலாம். இதுவரை அன்புமணியை அதிமுக அங்கீகாரம் செய்யவில்லை. ஒப்பந்தம் கையெழுத்தானதாக தெரியவில்லை. பழனிசாமிக்கு நான் எதையும் சொல்ல விரும்பவில்லை. யாரையும் விமர்சிக்கவில்லை" என்றார்.



# புளியங்குடி பகுதியில் உள்ள நியாய விலை கடையில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது

தென்காசி, ஜன.10-

தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சிக்கு உட்பட்ட சிந்தாமணி 3 வார்டு பகுதியில் உள்ள நியாய விலைக்கடைகளில் தமிழக வழங்கக்கூடிய பொங்கல் பரிசுத்தொகையை புளியங்குடி (கிழக்கு) நகரச் செயலாளர் அந்தோணிசாமி தலைமையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு |இலவச வேட்டி,சேலை மற்றும் 3000 ரூபாய், முழுக்கரும்பு, ஒரு கிலோ சக்கரை உள்ளிட்ட அனைத்து தொகுப்பினை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கினார்.

இதில் பொதுக்குழு உறுப்பினர் பத்திரம் சாகுல் ஹமீது, துணைச் செயலாளர் காந்திமதி அம்மாள், ஓட்டுநர் அணி அன்பு ராஜன், பேராசிரியர் பழனிச்சாமி, வார்டு செயலாளர் மணிகண்டன், நகரத் துணைச் செயலாளர் கருப்பசாமி, 6வது வார்டு செயலாளர் முருகேசன், ஈஸ்வரன், 21 வது வார்டு செயலாளர் மாடசாமி,கவிதா, குருசாமி, அழகையா, கமாலுதீன், அபுதாஹீர், 23வது வார்டு செயலாளர் கவுன்சிலர் தங்கம் ஜோதிப்பாண்டியன் பிவி பாலசுப்பிரமணியன் 29 வார்டு கவுன்சிலர் பாக்கியம், 30 வது கவுன்சிலர் வள்ளி அண்ணாமலை மற்றும் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# ஆலங்குளம் அரசு விழாவில் 444 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணி மாவட்ட ஆட்சியர் வழங்கினார்

தென்காசி, ஜன.10-

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அரசு விழாவில் 444 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணி மாவட்ட ஆட்சியர் வழங்கினார்*

மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் 05.01.2026 அன்று உலகம் உங்கள் கையில் என்ற திட்டத்தின் வாயிலாக மாணவர்களின் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் வகையில் 10 இலட்சம் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை சென்னை நந்தனம் வர்த்தக மையத்தில் தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, இன்றைய தினம் ஆலங்குளம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வீ.கே.புதூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த 444 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணிணி வழங்கப்பட்டது. ஆகவே மாணவர்களாகிய நீங்கள் நல்ல முறையில் மடிக்கணிணியை பயன்படுத்தி உங்களுடைய தொழில்நுட்பத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.தண்டபாணி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் காவேரி, ஆலங்குளம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் (பொ) முனைவர்.சிவசங்கரி, வீரகேரளம்புதூர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் முத்துலெட்சுமி மற்றும் பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஜன.28ல் கூடுகிறது நாடாளுமன்ற கூட்டத் தொடர்; பிப்.1ல் பட்ஜெட் தாக்கல்



புதுடெல்லி, ஜன.10-

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 28ம் தேதி கூடுகிறது. அடுத்த நிதி ஆண்டுக்கான பட்ஜெட் பிப்.1ம் தேதி தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தொடர்பாக நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவால் இறுதி செய்யப்பட்ட தற்காலிக அட்டவணையை மேற்கோள்காட்டி, அதிகாரிகள் கூறி இருப்பதாவது: நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 28ம் தேதி கூட உள்ளது. ஆண்டின் முதல் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் என்பதால் வழக்கம்போல் குடியரசுத் தலைவரின் உரையுடன் கூட்டத் தொடர் தொடங்கும். ஜன.28 ம் தேதி நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றுவார்.

குடியரசு தின விழாவில் பங்கேற்கும் முப்படைகள், மீண்டும் படைக்குத் திரும்பும் பீட்டிங் ரீட்ரீட் விழா ஜன.29ம் தேதி நடைபெற உள்ளதால் அன்றைய தினம் நாடாளுமன்றம் கூடாது. ஜன.30ம் தேதி நாடாளுமன்றம் கூடும். அன்றைய தினம் பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது. ஜன. 31 அன்று நாடாளுமன்ற இரு அவைகளும் கூடாது.

மத்திய பட்ஜெட் பிப்.1 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று தாக்கல் செய்யப்பட உள்ளது. நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டை தாக்கல் செய்வார்.

குடியரசுத் தலைவரின் உரை மற்றும் மத்திய பட்ஜெட் ஆகியவற்றுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதங்களுக்குப் பிறகு பிப். 13 அன்று நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படும். ஏறக்குறைய ஒரு மாத கால ஒத்திவைப்புக்குப் பிறகு மார்ச் 9ம் தேதி நாடாளுமன்றம் மீண்டும் கூடும். கூட்டத்தொடர் ஏப்ரல் 2ம் தேதி முடிவடையும்.

வழக்கமாக நாடாளுமன்ற கூட்டத்தொடர் வெள்ளிக்கிழமைகளில் ஒத்திவைக்கப்படும். ஆனால், ஏப்ரல் 3ம் தேதி புனித வெள்ளி என்பதால் ஏப்ரல் 2ம் தேதியே நாடாளுமன்றம் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படும். இவ்வாறு அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# மறைந்த திமுக தொண்டர் பிரபுராம் மகள்களின் கல்விச்செலவை அமைச்சர் ஐ.பெரியசாமி ஏற்றுக் கொண்டார்



சின்னாளபட்டி, ஜன .10-

ஆத்தூர் தொகுதியில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வண்ணம் டைடல் பார்க் அமைத்துக் கொடுக்கப்படும் என்று சித்தரேவில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு, மறைந்த திமுக தொண்டர் பிரபுராம் மகள்களின் கல்விச்செலவை அமைச்சர் ஐ.பெரியசாமி ஏற்றுக் கொண்டார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி மக்களின் பாதுகாவலராய் இருப்பவர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஜாதி, மத, இன வேறுபாடு இன்றி அனைவருக்கும் நலத்திட்டங்களை வாரி வழங்கும் வள்ளலாக உள்ளார். சித்தரேவில் முன்னாள் 1வது வார்டு செயலாளர் ரஜினி அவர்களின் தம்பி பிரபுராம் அவர்களின் மறைவிற்கு இல்லம் சென்று ஆறுதல் கூற அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் சென்றபோது பிரபுராமின் இரண்டு பெண் பிள்ளைகளும் பள்ளி மற்றும் கல்லூரியில் படிப்பதை தெரிந்து கொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் எக்காரணம் கொண்டும் பெண் பிள்ளைகளின் கல்வி பாதிக்கக்கூடாது என்கூறியதோடு, பழனி சாலையில் பிரபல கல்லூரியில் படித்துவரும் பெண் பிள்ளையின் கல்விச் செலவை ஏற்றுக் கொண்டார். அதன் பிறகு அமைச்சர் அவர்கள் பேசும்போது தொகுதியில் உள்ள மாணவச் செல்வங்களை எனது பிள்ளைகள் போல் கருதிதான் கிராமங்களில் உள்ள பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றியதோடு கூட்டுறவு மற்றும் கலை அறிவியல் கல்லூரியில் படித்துவரும் மாணவர்களின் கல்விச் செலவை ஏற்று வருகிறேன் என்றார். ஆத்தூர் தொகுதியில் பொறியியல் படிப்பு மாணவர்கள் வேலைதேடி வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களுக்கு செல்வதை தவிர்க்கும் வண்ணம் ஆத்தூர் ஒன்றியத்தில் விரைவில் டைடல் பார்க் அமைய உள்ளது. இது தவிர வெளிநாடுகளுக்கும் ஆத்தூர் தொகுதி மாணவர்கள் வேலைக்கு செல்லும் வண்ணம் உயர்தரமான பயிற்சி அளிக்க உள்ளது என்றார். தங்கள் குழந்தைகளின் கல்வி செலவை ஏற்ற அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு பிரபுராம் குடும்பத்தினர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். நிகழ்ச்சியின்போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், ஒன்றிய திமுக அவைத்தலைவர் காணிக்கைசாமி, தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேசன், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெல்லூர் மலைச்சாமி, சிறுபான்மையினர் ஒன்றிய அமைப்பாளர் பெரோஸ்கான், வார்டு செயலாளர்கள் இலியாஸ், ராஜாங்கம், சுதாகர், ஆரோக்கியசாமி, கணேசன், முன்னாள் வார்டு செயலாளர் மாடசாமி, ஊராட்சி செயலாளர் கண்ணன், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.




# சங்கரன்கோவிலில் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழா விழிப்புணர்வு நிகழ்ச்சி

தென்காசி, ஜன.10-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் பேருந்து நிலையத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், போக்குவரத்து காவல்துறை ஒழுங்குப் பிரிவு மற்றும் ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி இணைந்து நடத்தும் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழா விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கா. ராஜன் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார். காவல்துறை மேற்பார்வையாளர் விஜி உடன் போக்குவரத்து காவல்துறை ஏட்டு கிருஷ்ணவேணி முன்னிலை வகித்தார்.

மேலும், சங்கரன்கோவில் போக்குவரத்து ஒழுங்கு பிரிவு ஆய்வாளர் வசந்தகுமார் அனைவரையும் வரவேற்றார். இவ்விழாவில் கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் மாணவ மாணவியர்கள் சாலை விழிப்புணர்வு நிஜ நாடகம், மௌன நாடகம், பேச்சு, பாடல் மற்றும் உறுதிமொழி நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை தொடர்ந்து, சாலையில் செல்லும்போது விதிகளை பின்பற்றுதல் செல்போன் பயன்படுத்துதலை தவிர்த்தல், ஹெல்மெட் அணிதல், போதை தவிர்த்தல், சிக்னல் விதிகளை பின்பற்றுதல், ஆம்புலன்ஸ்க்கு வழி விடுதல் போன்ற நாடகங்களாக சித்தரிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியின் முடிவில் பள்ளி முதல்வர் நா.பழனிச்செல்வம் நன்றி கூறினார். இக்கூட்டத்தில் பள்ளி மாணவ மாணவியர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் உடன் எவர் கிரீன் டிரைவிங் ஸ்கூல் ராஜா மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வானிலை முன்னெச்சரிக்கை: தமிழகத்தின் 14 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு

சென்னை, ஜன.10-

வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாளை (ஜன.10) கரையை கடக்கும் நிலையில், தமிழகத்தில் நாகப்பட்டினம் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடமேற்கு திசையில் நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில், இலங்கை மட்டகளப்புக்கு தென்கிழக்கே சுமார் 170 கிமீ தொலைவிலும், சென்னைக்கு தென்கிழக்கே 710 கிமீ தொலைவிலும் நிலை கொண்டுள்ளது.இது, மேலும் வடமேற்கு திசையில் நகர்ந்து, வடக்கு இலங்கை கடலோரப்பகுதிகளில், திரிகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் இடையே நாளை பிற்பகல் அல்லது மாலை கரையை கடக்கக்கூடும்.இதன் காரணமாக நாளை (ஜன.10) தமிழக கடலோர பகுதிகளில் பெரும்பாலான இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 11ம் தேதி வட தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.12ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 13 முதல் 15ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.கனமழை வாய்ப்பு: திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் நாளை (ஜன.10) கன முதல் மிக கனமழையும், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.11ம் தேதி சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்கள் மற்றும் புதுச்சேரியில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமானது முதல் கனமழை பெய்யக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 65 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

# அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநகராட்சி 8வது வார்டில் கேக் வெட்டி கொண்டாட்டம்




சின்னாளபட்டி, ஜன .10-

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மார்க்கெட் சக்திவேல் குடும்பத்தினரின் சார்பாக, 3000 பேருக்கு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது. தாம்பாளத்தட்டில் புடவை, இனிப்புகள், மற்றும் அன்னதானத்துடன் பரிசுப் பொருட்கள் வழங்கப் பட்டது. திமுக மாநில துணைப் பொதுச்செயலாளர் ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திண்டுக்கல் மாநகராட்சி 8வது வார்டு ராமசாமிபுரம், சொசைட்டி தெரு, மூக்கன்ஆசாரி சந்து, சுபேதார் சந்து, காளிமுத்துபிள்ளை சந்து. நாட்டாண்மைக்காரன் சந்து, நாயக்கர் புதுத்தெரு 4 தெருக்கள், கிருஷ்ணாராவ் சந்து, காளிமுத்துப்பிள்ளை சந்து, ராமசாமிபுரம், மேற்கு கோவிந்தாபுரம் பகுதியைச் சேர்ந்த சொசைட்டி தெரு உட்பட அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள்; முன்னாள் மாமன்ற உறுப்பினர் மார்கெட் சக்திவேல் தலைமையில் பிரமாண்டமான கேக் வெட்டி அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள். பிறந்தநாள் கேக் வெட்டும்போது தென்பாண்டி சிங்கம் ஐ.பி.யார் வாழ்க, ஆத்தூர் தொகுதியின் காவலர் வாழ்க, எந்நாளும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் வாழ்க என இளைஞர்கள் கோஷமிட்டனர். நிகழ்ச்சியில் அமுதவள்ளி சக்திவேல், அரவிந்தகுமார், சோனியாதேவி மாமன்ற உறுப்பினர் ஆனந்தன், பகுதி துணைச் செயலர் சதீஸ்குமார், நாகபாண்டி, பிரதிநிதி மணிகண்டன், சிம்பு, ஸ்டிக்கர் பாண்டி, செந்தில்குமார், பாலகிருஷ்ணன், முத்துகிருஷ்ணன், சேகர், ராமமூர்த்தி, வாசு, மகளிர் அணியைச்சேர்ந்த ஹேமா, கிருஷ்ணவேணி, ஜெயலெட்சுமி, சரோஜா, சுந்தர், விக்னேஷ், நந்தகுமார். பிரசன்னா, ராஜேஸ், விஷால், பாலா உட்பட திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உட்ட பலர் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000